www.tamilarangam.net

அரசியல் தொடர் அற்புதன் எழுதுவது

# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

ஆறு மாதத்திற்குள் வடபகுதியை தமது கட்டுப்பாட்டில் கொண்டுவரப்போவதாக காலவரையறை குறித்தனர் படையினர்.

வடபகுதியெங்கும் குண்டு வீச்சுக்கள் நடந்தன. இலண்டனில் இருந்து வெளியாகும் 'கார்டியன்' பத்திரிகை நிருபர் கிறிஸ்தோப்பர் மொறிஸ் அப்போது யாழ்ப்பாணத்தில் இருந்து தகவல்களை திரட்டினார்.

பெப்ரவரி 7ம் திகதி 1991ல் கார்டியன் பத்திரிகையில் அவர் அனுப்பிய தகவல்கள் வெளியாகின. அதிலிருந்து ஒரு பகுதி:

"கடந்த சில வாரங்களாக விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள சகல பிரதேசங்களிலும் சிறீலங்கா விமானப் படை குண்டு மழை பொழிந்து வருகிறது.

குண்டுகள் எல்லாம் அப்பாவிப் பொதுமக்கள் வாழும் பகுதிகளிலேயே வீழ்ந்துள்ளன.

முறிகண்டியில் குண்டு வீழ்ந்து மூன்று வயது பெண் குழந்தை ஒன்று உட்பட மூன்றுபேர் கொல்லப்பட்டனர்.

அங்கே வசிக்கும் பொதுமக்கள் விடுதலைப் புலிகள் எவரும் அந்த இடத்தில் இருக்கவில்லை என்று கூறுகின்றனர்.

புலிகளுடன் போர் புரிய இயலாத படையினர் அப்பாவிப் பொது மக்கள்மீது ஆத்திரத்தை தீர்த்துக் கொள்வதாக பொதுமக்கள் கூறுகின்றனர்.

சிறீலங்கா அரசாங்கம் தங்களுடைய தாக்குதல்கள் 'பொது மக்களுக்கு எதிராகவே நடத்தப்படுவதாக கூறினாலும் அப்பாவி பொதுமக்களுக்கு எதிராகவே நடத்தப்படுகின்றன" என்று கார்டியன் தெரிவித்திருந்தது.



ளர் என்ற பாத்திரத்தை வகிக்க 'பீஸ் குவேக்கர்' முன்வந்தது.

மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் என்பதும் முன்றாம் தரப்பு தொடர்பாளர், ஏற்பாட்டாளர் அனுசரணையாளர் என்பதும் ஒன்றல்ல.

முன்றாம் தரப்பு ஏற்பாட்டாளராக செயற்பட்டு, அரசுக்கும், புலிகளுக்கும் இடையே தொடர்புகளை ஏற்படுத்துவதுடன் பீஸ் குவேக்கரின் பணி முடிந்துவிடும்.

பீஸ் குவேக்கரின் பிரதிநிதிகள் தம்மை வந்து யாழ்ப்பாணத்தில் சந்திக்கலாம் என்று புலிகள் கூறினார்கள்.

1991 பெப்ரவரி மாதத்தில் பீஸ்



கடற்கரும்புலி சிதம்பரம்

பீஸ் குவேக்கர் அமைப்பிடம் அரசையும், புலிகளையும் பேச்சு மேடைக்கு கொண்டு வரும் சக்தி கிடையாது.

அரசும் சரி, புலிகளும் சரி, தாம் பேச்சுக்களுக்கோ, சமாதான முயற்சிக்கோ தடையில்லை, எதிரானவர்களல்ல என்பதை வெளிப்படுத்தவே அந்த அமைப்பின் முயற்சிகளுக்கு ஆதரவு தெரிவித்தனர்.

சில வாரங்கள் பரபரப்பாக பேசப்பட்ட 'பீஸ் குவேக்கரின்' சமாதான முயற்சி அப்படியே அமுங்கிப்போனது.

### தூதர் அதிர்ச்சி

சிறீலங்காவின் பிஜித் தீவுக்கான தூதருக்கு ஏற்பட்ட சுவாரசியமான அனுபவம் ஒன்றை இங்கு தருகிறேன்.

1991இல் சிறீலங்காவின் சுதந்திர தினத்தை முன்னிட்டு பிஜித்தீவில் உள்ள பத்திரிகை ஒன்றில் விளம்பரம் செய்திருந்தார் பிஜித் தூதர் சமரவீர.

'பிஜி ரைம்ஸ்' என்ற பத்திரிகையிலேயே விளம்பரம் செய்திருந்தார்.

ஜனாதிபதி பிரேமதாசாவின் வாழ்த்துச் செய்தி ஒன்று அவரது பெரியளவான படத்துடன் பிரசுரிக்கப்பட்டிருந்தது.

'இனப்பிரச்சனைக்கு தீர்வு காண்பதற்கே எனது நிகழ்ச்சி நிரலில் முதலிடம் கொடுத்துள்ளேன்.' என்று அவரது செய்தியில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

அதே பத்திரிகையில் பிறிதொரு பக்கத்தில் பிரசுரமாகி இருந்த படமும் செய்தியும் சிறீலங்கா தூதருக்கு அதிர்ச்சியளித்தது.


வேலுப்பிள்ளை பிரபாகரனின் படத்தோடு, "ஆண்டவன் கிருபையால் ஒருவரும் கைவைக்க முடியாத மனிதன்" என்று கீழே குறிப்பிடப்பட்டிருந்தது.

அதனைக் கண்ட பிஜித்தூதர், "எவ்வளவு தூரத்தில் இருக்கும் பிஜித்தீவிலும் இந்த மனிதனிடம் இருந்து தப்ப முடியவில்லையே"

கொண்டிருந்தனர்.

பசீலன் 2,000, குமரப்பா 5,000 ஆகிய மோட்டார்கள் ஏவிய ஷெல்களால் படையினரின் முன்னேற்றம் தடைப்பட்டது.

சண்டையின் முடிவில் 17 படையினரின் உடல்களை புலிகள் கைப்பற்றினார்கள். முழுமையான விபரங்களை படைத்தரப்பு அறிவிக்கவில்லை. எனினும் படை நகர்வு முயற்சி கைவிடப்பட்டது.



கடற்கரும்புலி ஜெயந்தன்

புலிகள் தரப்பில் ஐந்துபேர் பலியானதாக கூறப்பட்டது. படையினரின் முன்னேற்றத்தை தடுத்து நிறுத்தும் புலிகளின் முறியடிப்பு சமருக்கு பால்ராஜ் தளபதியாக இருந்தார்.

படை நடவடிக்கை தோல்வியில் முடிந்ததை படைத் தளபதிகளால் ஏற்க முடியவில்லை.

"நாம் புலிகளைத் தேடி அழிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டோம். அந்தப் பணி முடிவடைந்துள்ளது. எனவேதான் படையினர் மீண்டும் முகாம் திரும்பியுள்ளனர்" என்று

## வல்லைக் கடலில் கடற் கரும்புலித் தாக்குதல்!

"என்னை அனுப்புங்கோ அண்ணை, நான் போகிறேன்." என்று தானாக முன்வந்தார்.

சிதம்பரம், ஜெயந்தன் இருவரும் கடற்கரும் புலிகளாக வெடிமருந்து நிரப்பப்பட்ட படகில் ஏறினார்கள்.

அவர்கள் புறப்பட்டது முன்னிரவு நேரத்தில்.

வல்லைக் கடலில் கரையில் இருந்து சுமார் எட்டுமைல் தொலைவில் தரித்து நின்றது 'அபித்தா.'

### இறுதிக் கட்டம்

திசையறி கருவியின் உதவியுடன் கரும் புலிப் படகு புறப்பட்டு இலக்கை நோக்கி விரைந்தது.

ஜெயந்தன் படகை செலுத்திக் கொண்டிருந்தார். சிதம்பரம் படகில் இருந்து வோக்கி ரோக்கி மூலம் கரையில் உள்ளோருடன் தொடர்பை கொண்டிருந்தார்.

நான்கு மைல் தூரத்தை கடலில் கடந்துவிட்டனர்.

"நாங்கள் கதைப்பது கேட்கிறதா?" என்று கரையிலிருந்து சூசை கேட்டார்.

"நீங்கள் கதைப்பது தெளிவாகக் கேட்கிறது!" என்று எவ்வித பதற்றமும் இல்லாமல் பதில் வருகிறது.

மரணத்தை சந்திக்கப் போகும் எவ்வித சலனமும் இவர்கள் குரலில் ஒலிக்கவில்லை.

சில நிமிடங்களில் கரும்புலிப் படகில் இருந்து தளபதி சூசைக்கு தகவல் வருகிறது:

"எங்களுடைய இலக்கை கண்டு விட்டோம்!"

கரையில் இருக்கும் கடற்புலிகள் படபடப்புடன் காத்திருக்கின்றனர்.

மேலும் சில நிமிடங்கள் கரைகின்றன.

வோக்கி உயிர்க்கிறது.

"திட்டமிட்டபடி செய்யப்போகிறோம்!" என்று குரல் வருகிறது.

அதுதான் அவர்களது இறுதித் தொடர்பு. இனிமேல் தொடர்பு கொள்ளவே முடியாத இடத்திற்கு போகப் போகிறார்கள்.

கரையில் நின்ற கடற்புலிகள் கண் கொட்டாமல் கடலையே பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். வோக்கி ரோக்கியில் காதைக்கொடுத்தபடி காத்திருக்கிறார்கள்.

சிதம்பரமும், ஜெயந்தனும் சேர்ந்து வோக்கி ரோக்கியில், 'புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்' என்று உரத்துக் கத்துகின்றனர்.

இதுதான் இறுதியான குரல்கள். இனி அவர்கள் குரலைக் கேட்கவே முடியாது.

அவர்கள் குரல் ஒலித்த அடுத்த சில நொடிகளில் கடலில் பெரு வெளிச்சமும், வெடி ஓசையும் கரைவரை எட்டுகிறது.

தாக்குதல் நடத்த முன்பாக 'புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்' என்று உரத்து முழங்குவதை கரும்புலிகள் வழக்கமாக கொண்டுள்ளனர்.

தாக்குதல் நடத்தப்போகும்போது அவர்களிடம் வோக்கி ரோக்கியும் இருக்கும்.

'புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்' என்று அவர்கள் கூறினால், இலக்குமீது பாயப் போகிறார்கள் என்பதை மறு முனையில் உள்ள பொறுப்பாளர் அறிந்து கொள்வார்.

'அபித்தா' கப்பல் பாரிய சேதத்துடன் கடலில் தத்தளித்தது. மறுநாள் அக் கப்பலை கடற்படையினர் கட்டி இழுத்துச் சென்றனர்.

கப்டன் சிதம்பரத்தின் சொந்தப் பெயர் பெரிய தம்பி சந்திரன், வல்வெட்டித்துறையைச் சேர்ந்தவர்.

சிறுவயதில் மீன்பிடித் தொழில் செய்துவந்தார். 1989இல் புலிகள் இயக்கத்தில் சேர்ந்தார். பலாலி இராணுவத் தளத்திற்கு முன்பாக ஆரம்பத்தில் காவல் பணி. பின்னர் கடற்புலிகளில் இணைந்து கரும்புலியானார்.

(தொடர்ந்து வரும்)

### ரஞ்சன் தகவல்

புலிகளுடனான யுத்தம் தொடர்பாக சில புள்ளி விபரங்களை ரஞ்சன் விஜயரத்ன பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

1990 ஜூன் 11ம் திகதி முதல் 1991 ஜனவரி 31ம் திகதிவரை 1441 பொலிஸ், இராணுவத்தினர் இறந்து அல்லது காணாமல் போயுள்ளனர். 1981பேர் காயமடைந்துள்ளனர்.

காயப்பட்டோரில் 1309 பேர் மருத்துவமனைகளில் இருந்து திரும்பிவிட்டனர். 672பேர் தொடர்ந்து சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

270 இராணுவத்தினர் கால்களை இழந்துள்ளனர். அவர்களுக்கு செயற்கை கால்கள் பொருத்தப்பட்டுள்ளன" என்று ரஞ்சன் விஜயரத்ன தெரிவித்தார்.

1441 பேர் பலியானதாக அரசு ஒப்புக் கொண்டதால் இழப்புத் தொகை மேலும் அதிகமாகவே இருந்திருக்கும்.

அரசாங்கம் எப்போதுமே உண்மையான போர்முனைத் தகவல்களை வெளியிட்டதில்லை.

தமது இழப்பை குறைத்துக் கூறுவதும், எதிர்த் தரப்பு இழப்பை மூன்று நான்கு மடங்கு அதிகமாகவும் கூறுவதையே ஐ.தே.கட்சி அரசும் கடைப் பிடித்தது.

### திருமலை தாக்குதல்

1991 மார்ச் ஆறாம் திகதி திருமலையில் திரியாய் என்னும் இடத்தில் இ.போ.ச. பஸ் வண்டியில் சென்ற இராணுவத்தினர் தாக்குதலுக்கு உள்ளாகினர்.

இ.போ.ச. பஸ் வண்டிகளில் படையினர் சென்று வருவதை அவதானித்த புலிகள் தாக்குதலுக்கு திட்டமிட்டனர்.

திரியாயில் கண்ணிவெடி புதைத்து காத்திருந்தனர் புலிகள். எதிர்பார்த்தபடியே பஸ் வண்டியில் பொலிஸ் இராணுவப் பிரிவு வந்து கொண்டிருந்தது.

கண்ணிவெடி வெடித்தது. பஸ் தூக்கிப் போடப்பட்டது. எட்டு இராணுவத்தினர் பலியாகினர். 28 பேர் படுகாயமடைந்தனர்.

இத் தாக்குதலுக்கு பழிவாங்கும் விதமாக திரியாய் தமிழ் மக்கள் மீது இராணுவத்தினர் தாக்குதல் நடத்தினர்.

தாக்குதலுக்கு பயந்த திரியாய் மக்கள் இடம் பெயர்ந்து சென்றனர்.


### சமாதான முயற்சி

இலண்டனில் 'பீஸ் குவேக்கர்' என்னும் சமாதானத்துக்கான அமைப்பு ஒன்று இருக்கிறது.

இவ்வமைப்பினருக்கும் அமெரிக்க சி.ஐ.ஏக்கும் இடையே தொடர்பு இருப்பதாக சந்தேகங்கள் நிலவின.

பீஸ் குவேக்கர் அமைப்பினர் இலங்கை அரசுக்கும் புலிகளுக்கும் இடையே சமாதான பேச்சு ஒன்றை ஆரம்பிக்க தாம் உதவுவதாக முன்வந்தனர்.

அதாவது மூன்றாம் தரப்பு ஏற்பாட்டா



## வவுனியாவில் பதினொருநாள் சமர்

குவேக்கரின் ஆசியப் பிரதிநிதி யாழ்ப்பாணம் சென்று புலிகளின் பிரதிநிதிகளைச் சந்தித்தார்.

புலிகளின் அன்றைய பிரதித்தலைவர் மாத்தையாவும், அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கமும் அவரைச் சந்தித்தனர்.

"விடுதலைப் புலிகள் சமாதான முயற்சிகளுக்கு தடையானவர்களல்ல. நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைக்கு புலிகள் தயாராக உள்ளனர்." என்று மாத்தையாவும், அன்ரன் பாலசிங்கமும் கூறினார்கள்.

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு திரும்பிய 'பீஸ் குவேக்கர்' பிரதிநிதி அரசாங்க பிரமுகர்களையும் சந்தித்தார்.

ஜனாதிபதி பிரேமதாசாவின் சர்வதேச விவகார ஆலோசகராக இருந்த பிரட்மன் வீரக்கோனையும் சந்தித்தார்.

தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகளையும் கொழும்பில் சந்தித்து உரையாடினார்.

இந்த முயற்சிகள் இரகசியமாக நடந்த போதும், ஏனைய தமிழ்க் கட்சிகள் ஊடாக பத்திரிகைகளுக்கு கசிந்துவிட்டன.

ஏதோ பெரும் திருப்பம் ஏற்படப்போவது போன்றும், பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப் போவது போன்றும் செய்திகள், விமர்சனங்கள் என்று பக்கம் பக்கமாக வெளியாகத் தொடங்கிவிட்டன.

என்று கூறியதாக தமிழ் நேசன் பத்திரிகை செய்தி வெளியிட்டிருந்தது.

### கடும் மோதல்

வவுனியாவில் இருந்து ஓமந்தை நோக்கி முன்னேற முயன்ற படையினருக்கும், புலிகளுக்கும் இடையே பலத்த சமர் மூண்டது.

மே 2ம் திகதி முதல் 11ம் திகதிவரை சமர் தொடர்ந்தது.

முதலில் படையினரை முன்னேற அனுமதித்தனர் புலிகள்.

முன்னேறிய படையினர் புலிகளின் நிலைகளை கைப்பற்றி நிலைகொண்டுள்ளதாகவும், தொடர்ந்து முன்னேறி வருவதாகவும் அரசு செய்தி கூறியது.

அரசு கூறிய செய்தியை எவ்வித மாற்றமும் இன்றி சில பத்திரிகைகள் தலைப்புச் செய்தியாக வெளியிட்டன.

வவுனியாவில் படையினர் முன்னேற்றம் புலிகள் பின்வாங்கினர் என்று ஆங்கில பத்திரிகைகள் தலைப்புச் செய்தி போட்டன.

இச் செய்திகள் வெளியாகிக் கொண்டிருந்தபோது, முன்னேறிய படையினர் புலிகளின் மோட்டார் ஷெல்களை சந்தித்துக்

படை அதிகாரி ஒருவர் கூறினார்.

### கடற் தாக்குதல்

கடற் கரும்புலிகளின் முதலாவது தாக்குதல் 10.07.90 அன்று வடமராட்சி கடற்பகுதியில் இடம்பெற்றது.

மூன்று கடற்கரும்புலிகளால் கடற்படையினரின் 'எடித்தாரா' கட்டளைக் கப்பல் தாக்கி சேதமாக்கப்பட்டது. இதுபற்றி முன்னரே விபரிக்கப்பட்டுவிட்டது.

அதன்பின்னர் இரண்டாவது கடற்கரும் புலித் தாக்குதல் 04.05.91இல் மேற்கொள்ளப் பட்டது.

கடற்படையினரின் கட்டளைக் கப்பல்களில் ஒன்றான 'அபித்தா' கப்பலை தாக்கித் தகர்ப்பதற்கு திட்டமிடப்பட்டது.

இரண்டு கரும்புலிகள் வெடிமருந்து நிரப்பப்பட்ட படகுடன் சென்று தாக்குதல் நடத்துவதுதான் திட்டம்.

கரும்புலியாக செல்ல இருந்த ஒருவரை கடைசி நேரத்தில் தவிர்க்க முடியாத காரணத்தால் அனுப்ப இயலவில்லை.

கடற்புலிகளின் சிறப்புத் தளபதி சூசையிடம் வந்த சிதம்பரம் என்னும் புலி உறுப்பினர்;



வாரமலர் தினமுரசு

டிச.13–19,1998

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்